OS:685/2018

Date:23.08.2023

பெயர் : **ராஜம்மாள்**

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>குறுக்கு விசாரணை:</u>**- 3 , 4 பிரதிவாதிகள் தரப்பில்

1ம் பிரதிவாதி செல்லம்மாள் எனது தாயார். 2ம் பிரதிவாதி எனது தம்பி, 3ம் பிரதிவாதி எனது தங்கை. 4ம் பிரதிவாதி எனது தங்கை கணவர். 5ம் பிரதிவாதி எனது மற்றொரு தங்கை வசந்தியின் கணவர். 6ம் பிரதிவாதி மேற்படி வசந்தியின் மகள் ஆவார். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தமிழில் உள்ளவைகளை எழுதுவேன், படிப்பேன். தாவாவை நான் தான் தாக்கல் செய்தேன். நான் இவ்வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் எனது தந்தை சொத்தில் எனக்கும் பாகம் வேண்டும் என கேட்டுள்ளேன். வேறு பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் பனிக்கனூரில் உள்ளது. அது எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. வழக்கு சொத்து விவரத்தில் ஒரே அயிட்டமாக தான் சொத்து விவரத்தில் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது தந்தையின் தாயார் பெருமாயிக்கு பாத்தியப்பட்டு திரும்ப என் தந்தைக்கு பாத்தியப்பட்டது. 1984ம் ஆண்டிலேயே எனது தந்தை கந்தசாமி பெயருக்கு தனி பட்டா, சிட்டா, அடங்கல் வரி ரசீதுகளும் கூட வந்து விட்டது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தானது எனது தந்தையின் தனிப்பட்ட சொத்து என்று சொன்னால் சரிதான்.

எனக்கு ஒரு ஆண், ஒரு பெண் இருக்கிறார்கள். அவர்கள் பெயர் கார்த்திகேயன், கவிதா. எனது மகன் கார்த்திகேயனுக்கு எவ்வளவு வயது இருக்கும் என்றால் சுமார் 37 இருக்கும், எனக்கு திருமணம் நடந்து சுமார் 40 ஆண்டுகள் இருக்கும். எனக்கு 1989ம் ஆண்டுக்கு முன்பே திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். என்னை எங்கு திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் எடப்பாடியில் உள்ள தங்காயூரில். எனது திருமணத்திற்கு பின்பு எனது கணவருடன் தான் தங்காயூரில் சேர்ந்து வசித்து வந்தேன் என்றால் சரிதான். எனது திருமணம் எனது பெற்றோர்கள் முன்னிலையில் எனது விருப்பப்படி

நடந்தது. எனது தங்கை வசந்திக்கு எனது பெற்றோர்கள் மிக சிறப்பான முறையில் திருமணம் செய்தார்கள் என்றால் சரிதான். எனது தங்கை 3ம் பிரதிவாதி சம்பூரணமும் ,4ம் பிரதிவாதியை அவரது விருப்பப்படி திருமணம் செய்து கொண்டார். எனது தங்கை சம்பூரணமும், 4ம் பிரதிவாதியும் வெவ்வேறு பிரிவை சார்ந்தவர்கள் என்று சொன்னால் அதை நான் தெரிந்து கொள்ள விரும்பவில்லை. 3ம் பிரதிவாதியின் திருமணம் எனது பெற்றோர் அனுமதியுடன் செய்து கொண்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் எனது தங்கை சம்பூரணத்தின் திருமணத்தில் கலந்து கொண்டேனா என்றால் இல்லை. மற்ற என் உடன் பிறந்த சகோதரர், சகோதரியின் திருமணத்தில் கலந்து கொண்டேனா என்றால் கலந்து கொண்டேன்.

தாவா சொத்து மொத்தம் எவ்வளவு ஏக்கர் பூமி உள்ளது என்றால் 5 ஏக்கர் 10 செண்ட் உள்ளது. மேற்படி தாவா சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்திற்கு செக்குபந்தி காட்டி உள்ளேனா என்றால் காட்டி உள்ளேன். தாவா சொத்திற்கு கிழபுறத்தில் பஞ்சாயத்து ரோடு உள்ளது, மேற்கே பெருமாள் கோவில், வடக்கே செல்வராஜ் நிலம். தெற்கே ஸ்ரீ தயாளர் என்பவர் நிலம் உள்ளது. நான் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள செக்குபந்திக்கும் தற்போது நான் சொல்லும் செக்குபந்திக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எத்தனை வீடுகள் அமைந்துள்ளன என்றால் இரண்டு வீடுகள் உள்ளது. இரண்டு வீடுகளும் மெத்தை வீடுகளா என்றால் ஒரு வீடு மெத்தை வீடு. ஒரு வீடு தொகுப்பு வீடு. தாவா சொத்தில் ஒரு கிணறும், ஒரு போர் வெல்லும் உள்ளது. எனது வழக்குரையில் தாவா சொத்தில் ஒரு கிணறும், ஒரு போர் வெல், இரண்டு வீடுகள் இருப்பதை மதிப்பீடு செய்யாமல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குரையில் மேற்படி கிணறு, போர்வெல், வீடுகளை காட்டாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், அதற்கு மதிப்பீடு செய்யாமலும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எனது தந்தை கந்தசாமி எந்த ஆண்டு இறந்தார் என்றால் 2007 ம் ஆண்டு இறந்தார். எனது தந்தை கந்தசாமி இறப்பதற்கு முன்பாகவே 08.11.2006ல் எனது தங்கை சம்பபூரணத்திற்கு வா.சா.ஆ 2ன்படி ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்று சொன்னால் அது உண்மை அல்ல. மேற்படி ஆவணம் என் தகப்பனாரிடமிருந்து ஏமாற்றி எழுதி வாங்கி கொண்டார். எனது தந்தையிடமிருந்து ஏமாற்றி

எழுதி வாங்கப்பட்டதாக நான் சொல்லும் ஆவணத்தின் படி எவ்வளவு விஸ்தீரணம் எழுதி வாங்கி கொண்டார்கள் என்றால் நான் நகல் எடுத்து பார்த்த பின்பு தான் 2 ஏக்கர் என்று தெரிந்து கொண்டேன். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்துள்ளேன். மேற்படி செட்டிலமெண்ட் ஆவணத்தில் எனது தங்கை சம்பூரணத்திற்கு எனது தந்தை " எனது மகள் என்பதாலும் நீ காதல் திருமணம் செய்து கொண்டதால் திருமணத்தின் போது எந்த சீர்வரிசையும் செய்யவில்லை என்பதால் இந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வைக்கிறேன் " என ஆவண வாசகங்கள் கண்டு எழுதிக் கொடுத்துள்ளார் என்று சொன்னால் ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளது ஆனால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தில், எனக்கு சொந்தமாய் பாத்தியப்பபட்டு என் பெயரில் பட்டாவாகி என்னுடைய சுவாதீனத்தில் இருக்கும் சொத்தினை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆவணத்தின் படி உள்ளது. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்திலேயே உன்னை தவிர (சம்பூரணம்) மற்றபடி எனக்கும் என் இதர ஆண் பெண் முதலான சகல வாரிசுகளுக்கும் வேறு யாருக்கும் எப்போதும் எந்தவிதமான பாத்தியமும் சம்மந்தமும், பின் தொடர்ச்சியும், உரிமையும், எக்காலத்திலும் கிடையாது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது உண்மை அல்ல. அதே ஆவணத்தில் இன்றே உங்களது சுவாதீனத்தில் ஒப்படைத்துவிட்டேன் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது உண்மை அல்ல.

எனது தங்கை சம்பூரணத்திற்கு ஆவணம் எழுதி கொடுத்த போதே சர்வே எண் 51/2 ஏ, 51/2 பி என பிரிந்து விட்டது என்றால் சரிதான். சர்வே எண் 51/2 பி நிலத்தை பொறுத்து எனது தங்கை சம்பூரணத்திற்கு தனி பட்டாவாகவே உள்ளது என்றால் எனக்கு தற்போது தான் தெரியும். 24.11.2011 தேதியில் எனது தங்கை சம்பூரணம் அவரது கணவரான 4 ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்று சொன்னால் கொடுத்திருப்பார். சர்வே எண் 51/2 பி தற்போது 4 ம் பிரதிவாதி பெயரில் வருவாய் ஆவணங்கள் மாற்றப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்யும் போதே வழக்கு சொத்தினுடைய வருவாய் ஆவணங்களை பார்த்தேனா என்றால் பார்த்தேன். சர்வே எண் 51/2 ஏ, 51/2 பி இரண்டாக உள்ளது என்பதை பார்த்துள்ளேனா என்றால் 2013 ம் ஆண்டே பார்த்தேன்.

வழக்கு சொத்திற்கான வருவாய் ஆவணங்கள் 3 மற்றும் 4 பிரதிவாதிகள் பெயரில் சர்வே எண் 51/2 பி தவறாக உள்ளது என கோட்டாட்சியரிடம் அதை திருத்தம் செய்ய வேண்டி மனு கொடுத்தேனா என்றால் இல்லை நீதிமன்றத்தில் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது வழக்கின் வழக்குரையில் எனது தங்கை வசந்தி காலமாகிவிட்டார் என்றும், அது குறித்து குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கு எப்போது நான் கடைசியாக சென்று வந்தேன் என்றால் ஒரு மாதத்திற்கு முன்பு சென்று வந்தேன். வழக்கு சொத்தினை நான் கூட்டாக அனுபவித்து வருவதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். என்னை எனது தந்தையின் ஒரு மகளாகவே எந்த இடத்திலும் காட்டவில்லை.

எனது தம்பி முத்துமாணிக்கத்திற்கு எங்களது குடும்ப உறுப்பினர்கள் சேர்ந்து ஒரு பாகபத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் என்னை அவர்கள் அழைக்கவில்லை, மேற்படி எனது தம்பி 2ம் பிரதிவாதிக்கு எனது குடும்ப உறுப்பினர்கள் சேர்ந்து என்னை தவிர 2ம் அயிட்ட சொத்தினை எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் எனக்கு தெரியாது. என்னை அவர்கள் அழைக்கவில்லை. ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்ட பின்பு உரிய காலத்திற்குள் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்பதால் இந்த வழக்கானது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் மேற்படி ஆவணங்களை பார்த்த பின்பு தான் எனக்கு தெரிய வந்தது. தற்போது 1 வது அயிட்ட சொத்தினை 4ம் பிரதிவாதி தான் சுற்றிலும் வேலி அமைத்து அதில் வீடு கட்டி இருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. 2006ம் ஆண்டு எனது தங்கை சம்பூரணத்திற்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்த போதே அந்த ஆவணத்தின் செக்குபந்தியில், 2வது அயிட்டமாக காட்டப்பட்டுள்ள சொத்திற்கு தெற்கு என காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

தாவா சொத்தானது எனது தந்தைக்கு தனிப்பட்ட சொத்து என்பதால் அவர் எழுதி கொடுத்துள்ள செட்டில்மெண்ட் ஆவணப்படி தான் 3ம் பிரதிவாதி அனுபவத்தில் இருந்து வந்து அதற்கு பின்பு அவர் 4ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்துள்ள செட்டில்மெண்ட் படி

4ம் பிரதிவாதியின் பராமரிப்பில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது தந்தைக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது என்பதாலும் அதில் எனக்கு எவ்வித பாக பாத்திய உரிமையும் ஏற்படாது என்று சொன்னால் சரியல்ல. என் தந்தை செட்டில்மெண்ட் ஏற்படுத்திய சொத்தை தவிர எனது குடும்ப உறுப்பினர்கள் ஏற்படுத்திக் கொண்ட பாக பிரிவினை ஆவணத்தில் கண்டுள்ள 2வது அயிட்ட சொத்தில் எனக்கு ஏதேனும் பாகம் உள்ளது என்றால், அதனை கொடுப்பதற்கு இந்த 3, 4 பிரதிவாதிகளுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரியல்ல. எனது தந்தையின் அனைத்து சொத்துக்களிலுமே எனக்கு பாகம் வேண்டும்.

நான் எனது திருமணத்திற்கு பின்பு 40 ஆண்டுகள் சொத்திலே இருந்ததில்லை என்றும் எனவே அந்த சொத்து எங்கு உள்ளது, எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றும் அதன் வருவாய் ஆவணங்கள் பற்றி எனக்கு முழுமையாக தெரியாது என்றால் சரியல்ல. நான் எப்போதுமே தாவா சொத்துக்களில் கூட்டு சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல. நான் சொத்து விவரத்தில் எத்தனை அயிட்ட சொத்துக்கள் என்பது கூட சரியாக சொல்லமுடியாத நிலையில் வழக்கின் உண்மைகளை கூறாமல் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவாவில் என்னென்ன நிவாரணங்கள் கேட்டுள்ளேன் என்பது கூட எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல.

வா.சா.ஆ 2 மற்றும் வா.சா.ஆ 4 இரண்டு செட்டில்மெண்ட் ஆவணங்களும் செல்லாது என கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. 3 மற்றும் 4 பிரதிவாதிகளிடமிருந்து சொத்திலிருந்து ஆதாயம் பெறவேண்டும் என்பதற்காக நான் 1 , 2 பிரதிவாதிகளுடன் கூட்டாக சேர்ந்து கொண்டு இவ்வழக்கை நடத்தி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளுடன் எனக்கு சுமூகமான உறவு உள்ளது என்றால் சரியல்ல எப்போதாவது ஒரு முறை பேசுவேன். நான் சொல்லி தான் 1, 2 பிரதிவாதிகள் வழக்கை நடத்தாமல் ஒரு கட்சி உத்தரவு ஏற்பட்டு இருந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல்

செய்துள்ள இவ்வழக்கில் 3, 4 பிரதிவாதிகளை பொறுத்து எவ்வித முகாந்திரமும் இல்லை என்பதால் அவர்களை பொறுத்து இவ்வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**

ஒப்பம்/-PW1

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்.